**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8069073

1. District / மாவட்டம் : சென்னை    PS / காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை சென்னை நகர்பிரிவு-II    Year / ஆண்டு : 2023    FIR No. / மு.த.அ. எண் : 04    Date / நாள் : 26.07.2023

2. (i) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended in 2018    Sections பிரிவுகள்: 7
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : / குற்ற நிகழ்வு நாள்    Date from : / நாள் முதல்    Date to : / நாள் வரை : 05.07.2023 at 1200 hrs, 18.07.2023 at 1500 hrs.
   Time Period : / நேர அளவு    Time from : / நேரம் முதல்    Time to : / நேரம் வரை : 24.07.2023 at 1200 hrs.
   (b) Information Received at PS. Date : / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 26.07.2023    Time / நேரம் : at 0900 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time / நேரம் : on 26.07.2023 after registration of FIR

4. Type of Information : Written/ Oral : / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : தட்டச்சு செய்து கொடுத்த எழுத்துமூலமான புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : 70 KM தென் கிழக்கு
   Beat Number : / முறைக் காவல் எண்    (b) Address / முகவரி : சீவாடி ஊராட்சி மன்ற அலுவலகம் செங்கல்பட்டு மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —    District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திரு.K.நிகமத்துல்லா    (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர் : K.கபூர்
   (c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு : 56/2023    (d) Nationality / நாட்டினம் : இந்தியர்    (e) Passport No. : / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : / வழங்கப்பட்ட நாள்    Place of Issue : / வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation / தொழில் : Business    (g) Address / முகவரி : எண்.5, புதிய குமரன் நகர் பிரதான சாலை சோழிங்கநல்லூர், சென்னை-119

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு.அரங்கநாதன், ஊராட்சி மன்ற தலைவர், சீவாடி ஊராட்சி மன்றம், செங்கல்பட்டு மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature]
26-07-2023

[signature] S. Vallinayagam

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 26.07.2023 at 1100 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் (S.VALLINAYAGAM)
Rank: நிலை Inspector of Police No. எண் .........
VRAC CC-III
Alandur, Chennai-16

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alandur, Chennai-600 016

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

<u>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை நகரப்பிரிவு-3 குற்ற எண்.04/2023 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் வரிசை எண்.12யின் தொடர்ச்சி பின்வருமாறு</u>

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது : 26.07.2023ந்தேதி காலை 0900 மணியளவில், சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3யின் காவல் ஆய்வாளர் சு.வள்ளிநாயகம் ஆகிய நான், மேற்சொன்ன அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, சென்னை-119, சோழிங்கநல்லூர், புதிய குமரன் நகர், முதல் பிரதான சாலையில், எண்.5 என்ற முகவரியில் வசித்து வரும் திரு.கே.நிகமத்துல்லா, த/பெ.கே.கபூர் என்பவர் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம் வந்து, சென்னை நகரப்பிரிவு-3 காவல் ஆய்வாளர் ஆகிய என்னிடம் தட்டச்சு செய்து கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று, மறைமுக விசாரணை செய்தும், இன்று 26.07.2023ந்தேதி காலை 1000 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்வருமாறு : அனுப்புநர் K.நிகமத்துல்லா, த/பெ.K.கபூர், நம்பர்.5, புதிய குமரன் நகர் பிரதான சாலை,சோழிங்கநல்லூர், சென்னை-119. பெறுநர் உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், சென்னை நகரப் பிரிவு-3, இலஞ்ச ஒழிப்பு துறை, ஆலந்துார், சென்னை-16. அய்யா, நான் சென்னை சோழிங்கநல்லூர், புதிய குமரன் நகர், முதல் பிரதான சாலையில், எண்.5 என்ற முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனது மனைவி பெயர் ஷகிலா மற்றும் மகன் பெயர் அக்பர். எனது மகன் அக்பர் திரைப்படத்துறையில் கேமரா டெக்னியஷயராக பணிபுரிந்து வருகிறார். நான் கடந்த 2010 முதல் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். பின்னர் நான் தொழில்முறையில் முன்னேற்றம் அடைந்து, கடந்த 2014முதல் JEMS Foundation என்ற பெயரில் ரியல் எஸ்டேட் மற்றும் கட்டுமான பணிகளையும் செய்து வருகிறேன். அப்போது மேற்சொன்ன JEMS Foundation என்ற நிறுவனத்தின் பங்குதாரர்களாக எனது மனைவி ஷகிலா மற்றும் மகன் அக்பர் ஆகியோர் இருந்தனர். காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் தாலுகா, கூவத்தூர் பகுதியை சேர்ந்த திரு.கண்ணன் என்கிற கண்ணபிரான் என்பவருக்கு சொந்தமான தற்போதைய

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் தாலுகா, சீவாடி கிராமத்திற்கு உட்பட்ட சர்வே எண்.197/2ல் அடங்கிய 336 சென்ட்(3.36 ஏக்கர்) நிலத்தை, புதிய மனைகளாக உருவாக்கம் செய்து விற்பதற்கு, JEMS Foundation என்ற எங்களது நிறுவனத்தின் பங்குதாரான எனது மகன் திரு.அக்பர் என்பவரின் பெயரில் பொது அதிகாரம் பெற்றேன். இது தொடர்பாக மதுராந்தகம் சார்-பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 14.03.2016ந்தேதி பொது அதிகாரம் பெற்ற ஆவணமாக (ஆவண எண்.1207/2016) பதிவு செய்யப்பட்டுள்ளது. பொது அதிகாரம் (பவர் ஏஜெண்ட்) என்ற முறையில் மேற்சொன்ன சொத்தை மனைப்பிரிவுகளாக பிரித்து, மேற்படி சொத்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து தலைவர் மூலம் மனைகளுக்குரிய அங்கீகாரம் பெற்று, உரிய சார்பதிவாளர் அலுவலகத்தில் மனைகளாக விற்பனை செய்யவும் அதிகாரம் அளித்துள்ளதால், அதனை தொடர்ந்து, DTCP No.954(R) 2018யின்படி, Royal City என்ற பெயரில் 317 எண்ணிக்கையிலான வீட்டு மனைகளாக பிரித்து. அதில் சிலவற்றை காலி மனைகளாகவும் மற்றும் வீடு கட்டியும் விற்பனை செய்தேன். பின்னர் எனது மகன் அக்பர் சினிமா துறையில் பணியாற்றி வருவதால், அவரது பணிச்சுமையை குறைக்கும் பொருட்டு, அவரது பெயரில் (விற்பனை செய்த இடங்களை தவிர) இருந்த மீதமுள்ள வீட்டு மனைகளை பொது அதிகார ரத்து பத்திர (ஆவண எண்.3645/2019)ஆவணமாக மதுராந்தகம் சார்-பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தும், பின்னர் மீண்டும் திரு.கண்ணன் என்கிற கண்ணபிரான் என்பவரிடமிருந்து மேற்சொன்ன Royal City என்ற பெயரில் உள்ள மீதமுள்ள காலி மனைகளாக விற்பதற்கும், வீடு கட்டி விற்பதற்கும், கே.நிகமத்துல்லா என்ற என் பெயரில் பொது அதிகாரம் பெற்றேன். இது தொடர்பாக மதுராந்தகம் சார்-பதிவாளர் அலுவலகத்தில் பொது அதிகார பத்திர ஆவண எண்.3646/2019ஆக பதிவு செய்யப்பட்டது. மேலும் Tamil Nadu RERA Approval No.TN/01/Regularisation-Layout/0028/2022 dated 19.01.2022 (File No.TNRERA/129/2022)யின்படி எனது பெயரில் அங்கீகாரம் பெற்றேன். எனது பெயரில் பதிவு செய்யப்பட்ட பொது அதிகார பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனை எண்கள் 1 முதல் 169 வரை உள்ளவற்றில், பூங்கா, எனது மகன் அக்பர் கிரையம்

செய்து கொடுத்த மனைகளை தவிர்த்து, 148 எண்ணிக்கையிலான வீட்டு மனைகள் உள்ளது. இதில் மனை எண்.140யில் 474 சதுர அடியிலும் மற்றும் மனை எண்.141யில் 601.94 சதுர அடியிலும் வீடு கட்டுவதற்கு, சீவாடி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களிடம் கட்டிட வரைபடம் அனுமதி பெறுவதற்கு கடந்த 25.05.2023ந்தேதி விண்ணப்பம் செய்தேன். பின்னர் அதனை தொடர்ந்து, கட்டிட வரைபட அனுமதி பெறுவதற்கு சீவாடி ஊராட்சி மன்ற தலைவர் திரு.அரங்கநாதன் என்பவரை கடந்த 05.07.2023ந்தேதி பகல் 12 மணியளவில் அவரது அலுவலக அறையில் நேரில் சந்தித்து வரைபட அனுமதி வழங்குமாறு வேண்டி கேட்டுக்கொண்டேன். அப்போது சீவாடி ஊராட்சி மன்ற தலைவர் திரு.அரங்கநாதன், மனை எண்.140 மற்றும் மனை எண்.141 ஆகியவற்றிற்கு தரைப்பரப்பளவு கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை வங்கி கணக்கில் செலுத்துமாறும், தனக்கு தனியாக ஒரு மனைக்கு ரூ.15,000./ வீதம் இரண்டு மனைகளுக்கும் சேர்த்து ரூ.30,000 கொடுத்து விடுங்கள் என்றும் கூறினார். நான் அதிர்ச்சியடைந்து என்ன சொல்வது என்று தெரியாமல் வந்துவிட்டேன். அதன்பிறகு அவர் கூறியவாறு மனை எண்.140க்கு தரைப்பரப்பளவு கட்டணம் ரூ.4400/- மற்றும் இதர கட்டணங்களாக ரூ.9900/- தொகையை இந்தியன் வங்கியின் Seevadi VP 224145 என்ற வங்கி கணக்கிற்கு சோழிங்கநல்லூர் கிளையின் மூலமாக செலுத்தினேன். இதேபோன்று மனை எண்.141க்கு ரூ.11,100/- தொகையை இந்தியன் வங்கியின் Seevadi VP 224145 என்ற வங்கி கணக்கிற்கு சோழிங்கநல்லூர் கிளையின் மூலமாக செலுத்தினேன். மேலும் இதை தவிர இரண்டு மனைகளுக்கும் படை வீரர் கொடி நாள் நிதியாக மொத்தம் ரூ.1000/-யும், தொழிலாளர்கள் நிதி என்ற வகையில் மனை எண்.140க்கு ரூ.5200/-யும், மனை எண்.141க்கு ரூ.6500/-யும் வரைவு காசோலையாக செலுத்தினேன். பின்னர் கடந்த 18.07.2023ந்தேதி மதியம் 3 மணியளவில், திரு.அரங்கநாதன் அவர்களை, சீவாடி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் அவரது அறையில் மீண்டும் சந்தித்து கட்டணங்களை செலுத்திய விவரங்களை தெரிவித்தேன். அப்போது திரு.அரங்கநாதன், நான் கேட்ட பணம் என்னாச்சு, பணம்

கொடுத்தால்தான் மேற்சொன்ன மனை எண்களுக்கான கட்டிட வரைபடம் அனுமதி வழங்க முடியும் என கறாராக சொல்லிவிட்டார். பின்னர் 24.07.2023ந்தேதி சீவாடி ஊராட்சி மன்றத்தலைவர் திரு.அரங்கநாதன் அவர்கள் அவரது செல்போன் எண்ணிலிருந்து (9176615908) எனது செல்போன் எண்ணிற்கு (9094444494) மதியம் 12 மணிக்கு தொடர்பு கொண்டு, மனை எண்.140 மற்றும் மனை எண்.141 தொடர்பான கட்டிட வரைபடம் அனுமதி ரெடியாக உள்ளதாகவும், நான் கேட்ட பணத்தை கொடுத்து விட்டு மேற்சொன்ன மனைகளுக்கான வரைபடம் அனுமதி பெற்று கொள்ளுமாறு தெரிவித்தார். மேற்சொன்ன மனைகளுக்கு கட்டிட வரைபடம் வேண்டி, அதற்கு தேவையான அனைத்து ஆவணங்களும் கொடுத்தும், அவை சரியாக இருந்தும், சீவாடி ஊராட்சி மன்ற தலைவர் திரு.அரங்கநாதன் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.30,000/- கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே எனது மனைகளுக்கு வரைபடம் அனுமதி வழங்குவதற்கு என்னிடம் ரூ.30,000/- லஞ்சமாக கேட்ட சீவாடி ஊராட்சி மன்ற தலைவர் திரு.அரங்கநாதன் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xx K.நிகமத்துல்லா dt.26.07.2023

Sir, I received the above complaint on 26.07.2023 at 0900 hrs.at my office and had discreet verification over the antecedents of the accused and bonafide of the complainant and after getting concurrence from the higher officers, registered a case in V&AC Chennai City-III Cr.No.04/2023 u/s 7 of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 this day 26.07.2023 at 10.00 hrs and taken up for investigation. Sd/- (S.VALLINAYAGAM), INSPR OF POLICE,V&AC,CC-III, Chennai

S. Vallinayagam 26.07.2023
(S.VALLINAYAGAM)
Inspector of police
V&AC, CC-III, Chennai 16

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alandur, Chennai-600 016